# 2.9 இந்தக் குணமாகுதல்

**வேத வசனம்:** நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஏசாயா 53:5

**அறிக்கை:** தம்முடைய தழும்புகளால் இயேசு கிறிஸ்து எனக்கு சுகத்தையும் சமாதானத்தையும் சம்பாதித்திருக்கிறார்

**சத்தியம்:** இயேசு கிறிஸ்துவே நம்மைச் சுகமாக்கும் கர்த்தர். அவர் சிலுவையில் சுமந்து தீர்த்தத் தண்டனையினிமித்தம் நமக்கு சமாதானமும் அவருடைய தழும்புகளால் குணமாக்குதலும் உண்டானது.

## பாடக்குறிப்புகள்

- **அற்புதமான சுகம்** - *அப் 3:1-9*
- **கிறிஸ்து செலுத்திய விலைக்கிரயம்**
- **ஆத்துமாவிற்கு சுகம்** - *சங் 147:3*
- **இயேசு தரும் சமாதானம்** - *நீதி 17:22*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *நம்முடைய குணமடைதலுக்காக இயேசு செலுத்திய கிரயம் என்ன? ஏசாயா 53:3-10*
- *அவருடைய பாடுகளினால் நமக்கு என்ன விதமான சுகங்களையெல்லாம் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார்?*
- *நாம் எவ்வாறு தெய்வீக சுகத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்? அப் 3:6,7*

## வேதப்பகுதி

*அப். 3:1-9, ஏசாயா 53*

## செயல்

**யாராவது ஒருவருக்கு தேவ அன்பைக் காட்டி அவர் குணமடைவதற்கு உதவி செய். உன்னைக் காயப்படுத்துகிற ஒருவருக்குத் தேவனின் அன்பை வெளிப்படுத்தி நல்ல நண்பனாக இருப்பதை நோக்கமாக்கு.**

## உடைக்கப்பட்டோம், ஆனால் சுகமடைந்தோம்

நம்முடைய உடைக்கப்பட்ட நிலையைக் குறித்து நாம் வெட்கப்படத் தேவையில்லை. பெலவீனத்தில் என் பெலன் பூரணமாய் விளங்கும் என்று தேவன் கூறுகிறார். ( 2 கொரி. 12:9). நாம் உடைக்கப்பட்டவர்களாகவோ அல்லது சீரானவர்களாகவோ இல்லாமல் இருக்கலாம். ஆனால் தேவன் நம்மீது கொண்ட அன்பின் நிமித்தம் நாம் இயேசு கிறிஸ்துவின் சுகமாகுதலைப் பெற்றுக்கொள்ள தகுதி பெறுகிறோம்.

## சிந்திக்க:

*எவை உன்னை உணர்வுபூர்வமாகக் காயப்படுத்துகின்றன?*

______________________________

______________________________

## ஜெபம்:

உன்னுடைய வாழ்வில் தேவனுடைய தெய்வீக குணமாக்குதலுக்காக ஜெபிக்கும் ஜெபம் ஒன்றை எழுது.

______________________________

______________________________